**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை**
**முன்னிலை – திரு. S.முகமது யூசுப் நவாஸ், B.A.,B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை**

**2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 04 ம் நாள் வியாழக்கிழமை**

**இடைக்கால மனு எண். 9/2025**
**இன்**
**இடைக்கால மனு எண். 2/2019**
**இன்**
**அசல் வழக்கு எண். 9/2019**

எஸ்.சிவராமன் ..... மனுதாரர்/வாதி
(மேற்படியாரின் பவர் ஏஜெண்ட்
கண்ணன் மூலமாக)

**/ எதிர் /**

1. முத்துக்கருப்பாயி
2. வேலுச்சாமி
3. வள்ளி
4. தமிழரசு
5. லதாராணி
6. பாத்திமா பீவி
7. சத்தியமூர்த்தி
8. மகாதேவன்
9. வேலு
10.முத்துராக்கு
11.சஞ்சய்குமார்
12. சார்பதிவாளர், மானாமதுரை ..... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பு 13.11.2025 இன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரார் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கணேசன் அவர்கள் ஆஜராகியும், 7 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ஆதிமூலம் அவர்கள் ஆஜராகியும், 9 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.அக்கினிராஜ் அவர்கள் ஆஜராகியும், 12 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.M.துரைப்பாண்டி அவர்கள் ஆஜராகியும், எதிருரை தாக்கல் இல்லை என தெரிவித்துள்ளநிலையிலும், 1 முதல் 6 மற்றும் 8, 10 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆஜரின்மையால்

தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், இருதரப்பு வாதம் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

**1.** மனுதாரர் தரப்பில் சிபிசி பிரிவு 151ன் படி 11ம் எதிர்மனுதாரர்/11ம் பிரதிவாதி சஞ்சய்குமார் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு பதிலமை மாற்று சார்பு செய்ய தமிழ் தினசரி நாளிதழில் விளம்பரம் கொடுத்திட அனுமதியளிக்க உத்தரவு வேண்டி அபிடவிட் தாக்கல் செய்து இம்மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**2. மனுவின் சுருக்கம்:**

தாவா வழக்கில் 11ம் எதிர்மனுதாரர்/11ம் பிரதிவாதி சஞ்சய்குமார் என்பவர் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராக நீதிமன்றத்தின் மூலமாகவும், தபால் மூலமாகவும் பல தடவை சம்மன் அனுப்பியும் சார்பு செய்ய இயலவில்லை என்றும், எனவே 11ம் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராக பதிலமை மாற்று சார்பு செய்திட தமிழ் தினசரி நாளிதழில் விளம்பரம் கொடுத்திட வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** 7, 9, 12 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. 1 முதல் 6 மற்றும் 8, 10 எதிர்மனுதாரர்கள் ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினராகியுள்ளார்கள்.

**4. இம்மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை : இம்மனு அனுமதிக்கத்தக்கதா / இல்லையா என்பதேயாகும் :–**

இவ்வழக்கில் மனுதாரர் தரப்பில் 11ம் எதிர்மனுதாரர் சஞ்சய்குமார் என்பவருக்கு நீதிமன்றத்தில் ஆஜராக நீதிமன்றத்தின் மூலமாகவும், தபால் மூலமாகவும் பல தடவை சம்மன் அனுப்பியும் சார்பு செய்ய இயலவில்லை என்றும், இந்நிலையில் மனுதாரர் சிபிசி பிரிவு 151ன் படி தாக்கல் செய்யப்பட்ட மனுவில் தமிழ் தினசரி நாளிதழில் விளம்பரம் கொடுத்து சார்பு செய்திட கேட்டுள்ளார்.

மனுதாரர் கூறியுள்ள காரணங்கள் ஏற்கதகுந்த நிலையில் உள்ளது. 7, 9, 12 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இம்மனுவானது நீதியின் நலன் கருதி செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

> "Audi alteram partem is a Latin phrase meaning 'listen to the other side', or "let the other side be heard as well". It is the principle that no person should be judged without a fair hearing in which each party is given the opportunity to respond to the evidence against them."

**மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் தாவா மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 டிசம்பர் மாதம் 04ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியபகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.12.04 17:05:51 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

மனுதாரர் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.12.04 17:06:06 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை

**DISTRICT MUNSIF COURT**
**MANAMADURAI**

## ORDER

**I.A.No.9/2025**
**in**
**I.A.No.2/2019**
**in**
**OS. No. 9/2019**

**Dated: 04.12.2025**